தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, கார்த்திகை 19, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 டிசம்பர் 5, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்கு தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்வதற்காக அவர்முன் வந்து நிற்கும்.

1. இரங்கற்குறிப்பு

திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக தனது 100–வது வயதில், நேற்று, 4–12–2014 வியாழக்கிழமையன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள் 1952–1957 ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் கூத்துப்பரம்பா தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகத் திறம்படப் பணியாற்றினார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

[பேரவைத் தலைவர்] [2014 டிசம்பர் 5

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

துணை மின் நிலையம்

***10725—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர் செல்லப்பம்பாளையம் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர், செல்லப்பம்பாளையம் பகுதிக்கு தற்போது பொள்ளாச்சி–110/22 கிலோ வோல்ட், அங்கலக்குறிச்சி–110/22 கிலோ வோல்ட் மற்றும் பூலாங்கிணறு–110/22 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.